DR. H. V. HANDE : Is it not a fact that this also comes under the Banking Companies Act 1964? Is it not applicable to co-operative societies? There is a clear ruling. Have you consulted the Reserve Bank on this? How do you say that it does not come under the Banking Companies Amendment Act?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The hon. Member need not get excited over this. The question was about Rule 46(4) framed under the Madras Co-operative Societies Act, and the rules under the Banking Companies Amendment Act. If the hon. Member is asking a supplementary question relating to the Banking Companies Amendment Act, he may do so. But let him not confuse one with the other.

Sri Sadana Rescue Centre

*347 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Religious Endowment be pleased to state :

(*a*) whether new buildings are to be constructed for the Sri Sadana Rescue Centre for Women in Mylapore, Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) & (இ) அரசு கண்காணிப்பு இல்லமும் ஸ்ரீ சாதனா மீட்பு இல்லமும் இப்பொழுது செயல்பட்டு வரும், சென்னை மயிலாப்பூர் கச்சேரி சாலையிலுள்ள "எவரெஸ்ட்" என்கிற, அரசுக்குச் சொந்தமான சுற்று வளவுக்குள் கிடைக்கக்கூடிய காலி நிலத்தில் ரூ. 1.40 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஸ்ரீ சாதனா மீட்பு இல்லத்திற்காக விடுதிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு மட்டுமே அரசு ஒப்பளித்துள்ளது. பொதுப்பணித் துறையினால் மேற்படி பணிக்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. கட்டிடப் பணிக்காக ஒப்பந்தப் புள்ளிகளும் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று செங்கற்பட்டு சரகம், சென்னை, கண்காணிப்புப் பொறியாளருக்குப் பொதுப்பணித்துறையின் (கட்டிடங்கள்) தலைமைப் பொறியாளர் கட்டளை பிறப்பித்துள்ளார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த ஸ்ரீ சாதனா மீட்பு இல்லத்தில் எத்தனை மாணவிகள் இப்பொழுது இருக்கிறார்கள். புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசாங்கம் ஏதாவது மானியத் தொகை கொடுக்க இருக்கிறதா? ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இந்த ஸ்ரீ சாதனா மீட்பு இல்லத்தில் வயதுவந்தவர்கள் 68 பேர்களும், குழந்தைகள் நான்கு பேர்களும் இருக்கிறார்கள். இந்தக் கட்டடத்திற்கான தொகை அரசாங்கத்தின்மூலமாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நம்புகிறேன். சரியான தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. கே. விநாயகம் : இப்பொழுது கட்டடம் இருக்கிற இடத்தில் இடம் போதவில்லை, ஆகவே இதைப் பெருக்குகிறோம், புதியதாகக் கட்டடம் கட்டுகிறோம் என்று சொன்னார்கள். அது எதைக் காட்டுகிறது?

1970 மார்ச் 12]

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்த ஸ்ரீ சாதனு மீட்பு இல்லத்திற்காக இரண்டு கட்டடங்கள் வாடகைக்கு எடுக்கப்பட்டு, மாத வாடகையாக ரூ. 400 வீதம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதுவரைக்கும் வாடகையாக ரூ. 80,000 கொடுக்கப்பட்டு வந்துள்ளது. அந்த வீட்டுக்காரர் அந்த வீட்டைத் தான் வாங்கிக்கொள்ளவேண்டும் என்பதற்காக எந்தவிதமான வசதியையும் செய்து கொடுக்காத காரணத்தினுல், வீட்டுக்காரர் அந்த வீட்டை தனக்கு வேண்டும் என்று வற்புறுத்தி வந்த காரணத்தினுல், குழந்தைகளும் வரவர குறைந்துகொண்டு வருகிற காரணத்தினுல், பொருளாதார அடிப்படையில் தனியாகக் கட்டடம் கட்டப்பட்டால் அதிக லாபம் இருக்கிற காரணத்தினுலும் அந்தக் கட்டடம் கட்டப்படுகிறது.

Daya Sadan

* 348 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the Vice-President of Daya Sadan presented any memorandum to the Hon. the Minister about September—October, 1969; and

(*b*) if so the details thereof?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) & (இ) தயாசதனத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஒவ்வொருவருக்காகவும் அளிக்கப்படும் பேணுதல் மானியம் 1-4-1969 முதற்கொண்டு திங்கள் ஒன்றுக்கு ரூ. 15-லிருந்து ரூ. 30-ஆக உயர்த்தப்பட வேண்டும் என முறையீடு ஒன்றை அக்காப்பிலத்தின் உதவித்தலைவர் 1969 அக்டோபர் 28-ஆம் நாளன்று அரசுக்கு அனுப்பினுர். என்னிடமும் அந்தக் கோரிக்கை மனுவைத் தந்திருக்கிருர்கள். இந்த வேண்டுகோள் அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தயாசதனத்தின் உதவித் தலைவர் சங்களிடம் அளித்த அந்த வேண்டுகோளின் பேரில் நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் முன்வருமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : ஏற்கனவே இது மாதிரி இருப்பவர்களுக்கு ஒருவருக்குரிய பேணுதல் மானியத்தொகை ரூ. 15 ஆக இருக்கிறது. இந்த இல்லத்திற்கு ஒரு ஆண்டுக்கு ஒரு லட்ச ரூபாய்க்குமேல் இப்பொழுது மானியத் தொகையாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ரூ. 5 அதிகப்படுத்தினுல்கூட, ஆண்டுக்கு ரூ. 36,000 அதிகமாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதைப்பற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். அவர்களுக்கு அனுதாபமான முடிவுகள் எடுக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராசன் : தயாசதனத்தில் வந்து சேர்ந்திருப்பவர்கள் யார்? இதில் சேருவதற்கு வேண்டிய யோக்கியதாம்சங்கள் என்ன ? யாருடைய தயவில் இங்கு வந்திருக்கிருர்கள் ?